உ

வேலுமயிலுந்துணை.

குருபாததாசர்.

அருளிச்செய்த

திருப்புல்வயல்

குமரேசர்சதகம்.

இஃது

கோகுலாபுரம்.

அருணசலமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.

கொண்ணூர்

மாணிக்கமுதலியார்

கம்பேனியாரவர்களால்

(*)

தமது.

மநோன்மணிவிலாசவச்சிக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

விஷு ௵ ஆடி ௴

திருச்சிற்றம்பலம்.

குமரேசர் சதகம்

காப்பு.

பூமேவுபுல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல் *
தேமேவியசதகஞ் செப்பவே-கோமேவிக் *
காக்குஞ்சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக் *
காக்குஞ்சரவணத்தான் காப்பு *

அவையடக்கம்.

மாரிக்குநிகரென்று பனிசொரிதல்போலவு மனைக்குநிகரென்று
சிறுபெண்-மணல்வீடுகட்டுவதுபோலவுஞ்சந்திரன்முன் மருவுமி
ன்மினிபோலவும். பாருக்குணல்லோர் முனைமித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ்செயல்போலவும், பச்சைமயிலாடுதற் கிணையென்று
வான்கோழியாரிலாடுதல்போலவும்- பூரிக்குமினியகாவேரிக்கு நிக
ரென்றுபோதுவாய்க்கால்போலவும், புகல்சிப்பிமுத்துக்கு நிகரா
ப்பளிங்கைப் பொருந்தவைத்ததுபோலவும், வாரிக்குமுன்வாவி
பெருகல்போலவுமின்சொல்வாணர்முனுகந்துபுல்லை, வாலகுமரே
சர்மேற்சதகம்புகன்றனன் மனம்பொறுத்தருள்புரியவே, *

குமரேசர்மகிமை

பூமிக்கொராறுதலையாய்வந்து சரவணப்பொய்கைதனில் விளை
யாடியும்- புனிதற்குமந்த்ரவுப தேசமொழிசொல்லியும் போதனை
ச்சிறையில்வைத்தும், தேமிக்கவரிகரப்பிரமாதிகட்குஞ் செருக்க
முடியாவசுரனை, தேகங்கிழித்துவடிவேலினுளிருகூறி செய்தமரர்
சிறைதவிர்த்தும். நேமிக்குளன்பரிட னுற்றசமயந்தனி;னினைக்கு
முன்வந்துதவியும், நிதமுமெய்த்துணையாய் விளங்கலா லுலகினு
னை நிகரானதெய்வமுண்டோ, மாமிக்கதேன்பருகு பூங்கடம் ப
ணியுமணிமார்பனே வள்ளிகணவா, மயிலேறிவிளையாடி குகனே
புல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௧)

அந்தணரியல்பு

குறையாதகாயத்ரியாதிசெபமகிமையுங்கூறுசுருதிப்பெருமையு
ம், கோதிலாவாகமபுராணத்தின் வளமையுங்குலவுயாகாதிபலவும்,
முறையாநடத்தலாற் சகலதீவினைகளையு முளரிபோலேதகிப்பார்-
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதிவிகளிற்றெய்வ மூர்த்தமுனை
டாக்குவிப்பார்? நிறையாகநீதிநெறி வழுவார்களாகையா நீள்ம
ழைபொழிந்திடுவதும், நிலமதுசெழிப்பதும்மரசர்செங்கோல்புரி
யுநிலையுமாதவர்செய்தவமும், மறையோர்களாலேவிளங்குமிவ்வுல
கத்தின்மானிடத்தெய்வமிவர்காண், மயிலேறிவிளையாடி குகனேபு
ல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௨)

அரசரியல்பு.

குடிபடையிலமைச்சமந்திராலோசனை குறிப்பறிதல்சத்யவசனம்; கொடைநித்தமவரவர்க்கேற்றபரியாதைபொறைகோடாதசதுருபாயம், படிவிசாரணையொடு ப்ரதானிதளகர்த்தரைப் பண்பறிந்தேயமைத்தல், பல்லுயிரெலாந் தன்னுயிர்க்குநிகரென்றேபறித்தல்குற்றங்கள்களைதல், குடிபெறுதனக்குறுதி யானைநட்பகமின்மை சுகுணமொடுகல்வியறிவு, தோலாதகாலமிட மறிதல்வினைவலிகண்டு துஷ்டநிக்ரகசௌரியம்- வடிவுபெறுசெங்கோ னடத்திவருமரசர்க்கு வழுவாதமுறைமையிதுகாண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௩)

வணிகரியல்பு

கொண்டபடிபோலும்விலை பேசிலாபஞ்சிறிது கூடிவரநயமுரைப்பார் கொள்ளுமொருமுதலுக்கு மோசம்வாராதபடி குறுகவேசெலவுசெய்வார்- வண்டப்புரட்டர்தா முறிதந்து பொன்னடகுவைக்கினுங்கடனீந்திடார்- மருவுநாணயமுளோர்கேட்டனுப்பினுமவர்வார்த்தையிலெலாஞ்சொடுப்பார்- கண்டெழுதுபற்றுவரவினின்மயிர் பிளந்தேகணக்கிலணுவாகிலும்விடார் - காசுவீணிற்செலவிடாருசிதமானதிற் கனதிரவியங்கள்விடுவார், மண்டலத்தூடுகனவர்த்தகஞ்செய்கின்றவணிகர்க்கு முறைமையிதுகாண் - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௪)

வேளாளரியல்பு

நல்லதேவாலயம்பூசனைநடப்பதும்நாடோறுமறைபொழிவதும்-நாடியதபோதனர்கண்மாதவம்புரிவது நவில்வேத வேதியரெலாம்- சொல்லரியயாகாதிகன்மங்கள் செய்வதுந்தொல்புவிசெழிக்குநலமும்-சுபசோபனங்களுங்கொற்றவர்கள் செங்கோல் துலங்குமனுநெறிமுறைமையும், வெல்லரியசுகிர்தமொடு வர்த்தகன்சொல்விலையும்விற்பனையுமதிகபுகழும்- மிக்கவதிகாரமுந் தொழிலாளர்சீவனமும் வீரரணசூரவலியும்- வல்லமைகள்சகலமும்வேளாளர்மேழியின் வாழ்வினால்விளைவனன்றோ- மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௫)

பிதாக்கள்-

தவமதுசெய்தே பெற்றெடுத்தவன்முதற்பிதா தனைவளர்த்தவனொருபிதா- தயையாகவித்தையைச் சாற்றினவனொருபிதாசாந்தசற்குருவொருபிதா - அவமறத் தாள்கின்றவரசொருபிதா நல்லவாயத்துவேளைதன்னில் - அஞ்சலென்றுற்றதுயர் தீர்த்துளோனொருபிதா வன்புளமுன்னோனொருபிதா - கவளமிடு மனைவியைப் பெற்றுளோனொருபிதா கலிதவிர்த்தவனொருபிதா . காசினியி லிவர்நித்தம்பிதாவென்றுளங் கருதுவதுநீதியாகும் - புவிதனின்

மதியரவுபுனைவிமலருதவுசிறு மதலையெனவருகுருபரா- மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬)

ஒன்றையொன்றுபற்றியிருப்பன:

சத்தியந்தவறு திருப்பவரிடந்தனிற் சாந்துதிருமாதிருக்கும்-சக்ததந்திருமா திருக்குமவிடந்தனிற் றனது பாக்கியமிருக்கும்-மெய்த்துவரு பாக்கியமிருக்கு மவிடந்தனில் விண்டுவின்கலையிருக்கும்- விண்டுவின்கலைபூண்டிருக்கு மவிடந்தனின் மிக்கானதயையிருக்கும்- பத்தியுடனினியதயையுள்ளவரிடந்தனிற்பகர்தருமமிசவிருக்கும்-பகர்தரும முள்ளவரிடந்தனிற் சத்துருபலாயனத்திறலிருக்கும் - வைத்திசைமிகுந்ததிறலுள்ளவரிடத்தில் வெகுமன்னுயிர்சிறக்குமன்றே - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவு குமரேசனே. (௭)

இவர்க்கிவர்தெய்வமெனல்,

ஆதுலர்க்கன்னங் கொடுத்தவர்களேதெய்வ மன்பானமாணாக்கருக், கரியகுருவேதெய்வமஞ்சினோர்க்காபத் தகற்றினோனேதெய்வமாம், காதலுறுகற்புடைய மங்கையர்தமக்கெலாங் கணவனே மிக்கதெய்வம், காசினியின்மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபுகாக்குமன்னவர்தெய்வமாம், ஓதரியபிள்ளைகட்கன்னை தந்தையர்தெய்வமுயர்ஜாதிமாந்தர்யார்க்கும், உறவின்முறையார்தெய்வம் விசுவாசமுள்ளபேர்க் குற்றசிவபத்தர்தெய்வம், பாதயவினாற்குத்திரர்க்குமறையோர்தெய்வம் வானவர்க்குத் தெய்வம்நீ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௮)

இவர்க்கிதினைவெனல்

ஞானநெறியாளர்க்கு மோட்சத்திலேநினைவு நல்லறிவுளோர்தமக்கு, நாடோறுந் தருமத்திலேநினைவுமன்னர்க்கு ராச்சியந் தன்னில்நினைவு, ஆனகாமுகருக்கு மாதர்மேலேநினைவு எஞ்சாததிருடருக்கு அனுதினங்களவிலே நினைவுகனவணிகருக்காதாயமீது நினைவு, தானமிகுகுடியாளருக்கெலாம்வேளாண்மைதனினினைவுகற்பவர்க்குத்தகுகல்வியின்மேனினைவு வேசியர்க்கினியபொருடருவோர்கண்மீதுநினைவு, மானபரனுக்குமரியாதைமேனினைவெற்குமாறுதுன்மீதுநினைவு, மயிலேறிவிளையாடுகுகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே; (௯)

இவர்க்கிதுவில்லையெனல்;

வேசைக்குநிசமில்லை திருடனுக்குறவில்லை வேந்தற்கு நன்றியில்லை: மிடியற்குவிலை மாதர்மீதுவங்கணமிலை மிலேச்சர்க்கு நிறையதில்லை, ஆசைக்குவெட்கமிலை ஞானியானவனுக்குலகமில்லை மூர்க்கன்றனக், கன்பில்லை காமிக்குமுறையில்லை குணமிலோர்க்கழகில்லைசித்தசுத்தன், பூசைக்குநவிலங்கசுத்தியிலையாவுமுணர்புலவனுக்கயலோரில்லை, புல்லனுக்கென்றுமுசி தானுசிதமில்லைவரு புலை

யர்க்கிரக்கமில்லை, மாசைத்தவிர்த்தமதிமுக தெய்வயானையொடுவேள்ளிக்கிசைத்தவழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, (௰)

இப்படிப்பட்டவரிவரெனல்

நியாயநெறிதவறுமனுலகபரிபாலன நடத்துமவனேயரசனும்-ராஜயோசனைதெரிந் துறுதியாகியசெய்தி நவிலுமவனேமந்திரி, நேயமுடனே தன்சரீரத்தையென்னாத நிர்வாகியேசூரனும், நிலைபெறுமிலக்கண மிலக்கியமறிந்துசொலு நிபுணகவியே கவிஞனும், ஆயதொருவாகடந்தாதுவினிதானமுமறியுமுதியோன்வயித்தியன், அகமின்றிமெய்யுணர்ந்தைம்புலனொழித்து விட்டவனேமெய்ஞ்ஞானியெனலாம்-மாயவர்சகோதரி மனோன்மணிக்கன்பான வரபுத்ர வடிவேலவா. மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௰௧)

விரைந்தடக்கத்தகுவனவிவையெனல்,

அக்கினியைவாய்மூந்து தூர்ச்சனாவஞ்சமனையாளை வளர்பயிர்கொள்களையை, அஞ்சாவிரோதிகளையநியாயமுடையோரையகீர்த்தியப்பெண்களார்ப்பைக்-கைக்கினிய தொழிலாளியைக்கொண்டவடிமையைக்களவுசெய்யுந்திருடரைச், கருதியவிசாரத்தையடக்கமில்பவிசையைக்கடிதானகோபந்தனை, மெய்க்கினிதலாப்பிணியையவையுதாசீனத்தை வினைமூண்டிடுஞ்சண்டையை, விஷமேறுகோரத்தை யன்றடக்குவதலான் மிஞ்சவிடலாகாதுகாண், மைக்கினியகன்னிகுற வள்ளிதெய்வானையைமணஞ்செய்தபேரழகனே. மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ( )

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக்கொடுக்குந்தியாகிகடமக்கு நற்பொருடுரும்பு தன்னுயிரையெண்ணாசூரனுக்கெதிராளி தளமெலாமொருதுரும்பு-பேரானபெரியருக் கற்பரதுகையினிற் பிரயோசனன்றுரும்பு-பெரிதானமோட்சசிந்தனையுள்ளவர்க்கெலாம்பெண்போகமொருதுரும்பு. தீராதசகலமும்வெறுத்ததுறவிக்குவிறல்சேர்வேந்தனொருதுரும்பு-செய்யகலைநாமகள் கடாட்சமுள்ளோர்க்கெலாஞ்செந்தமிழ்க்கவிதுரும்பாம் வாராருமணிகொள்முலைவள்ளிதெய்வானையை மணம்புணரும்வடிவேலவா - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௰௩)

இதனைவிளக்குவதிதுவெனல்

பகல்விளக்குவதிரவி நிசிவிளக்குவது மதிபார்விளக்குவதுமேகம்-பதிவிளக்குவது பெண்குடிவிளக்குவதபசு பரிவிளக்குவதுவேகம்-இகல்விளக்குவது வலிநிறைவிளக்குவது நலமிசைவிளக்குவதுசுதிபூ-ரிடம்விளக்குவது குடியுடல்விளக்குவதுண்டியினிய

சொல்விளக்குவதருள் - புகல்விளக்குவதுகொடைதவம் விளக்குவ
தறிவுபூவிளக்குவதுவாசம்-பொருள்விளக்குவது திருமுகம்விளக்
குவதுநகைபுத்தியைவிளக்குவது நூல்-மகம்விளக்குவதுமறைசொ
ல்விளக்குவதுநிசம் வாவியை விளக்குவதுநீர்-மயிலேறி விளையாடு
குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௧௪)

பிறப்பிட நன்மையால் நன்மைபெறுமை

சிங்காரவனமதி லுதிப்பினுங்காகமது தீஞ்சொல்புகல் குயி
லாகுமோ-திரையெறியும்வாவியிற்பூத்தாலுமே கொட்டிசெங்கஞ்
சமலராகுமோ-அங்கானகத்திற்பிறந்தாலு முயலான தானையின்க
ன்றாகுமோ-ஆண்மையாகியநல்ல குடியிற்பிறந்தாலு மசடர்பெ
ரியோராவரோ-சங்காடுபாற்கடல் பிறந்தாலுநத்தைதான் சாளக்
கிராமமாமோ-தடமேவுகடல்நீரிலேயுப்புவிளையினுஞ்சாரசக்கரை
யாகுமோ-மங்காதசெந்தமிழ்க், குறுமுனிக்குபதேசம்வைத்தமெ
ஞ் ஞானகுருவே-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமே
வுகுமரேசனே (௧௫)

பலர்க்கும்பயன்படுவன

கொண்டல்பொழிமாரியு முதாரசற்குணமுடைய சோவுமரு
ணியினீரும்-கூட்டமிடுமம்பலத் தருதருவிநீழலும் குடியாளர்
விவசாயமும்-கண்டவர்களெல்லாம் வரும்பெருஞ்சந்தியிற் கனிப
லபழுத்தமரமும், கருணையுடனேவைத்திடுந்தணீர்ப்பந்தலுங்கா
வேரிபோலூற்றமும்-விண்டலத்துறைசந்திராதித்தகிரணமும் வீ
சுமாருதசீதமும்-விவேகியெனுநந்தோரிடத்திலுறுசெல்வமும்வெ
குசனர்க்குபகாரமாம், வண்டிமிர்கடப்பமலர் மாலையணிசெங்க
ளபமார்பனே வடிவேலவா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீ
டு மலைமேவுகுமரேசனே (௧௬)

தாமழியினுங் குணமழியாதவை

தங்கமானதுதழலி னின்றுருகி மறுகினுந் தன்னொளிமழுங்கி
டாதுசந்தனக்குறடுதான்மெலிந்துதேய்ந்தாலுமோ தன்மணங்கு
ன்றிடாது - பொங்கமிகுசங்குசெந்தழலில்வெந்தாலுமோபொலி
வெண்மைகுறைவுறாது-போதவேகாயந்துநற் பால்குறுகினும்
பொருந்துசுவைபோய்விடாது-துங்கமணிசாணையிற்றேய்ந்துவி
ட்டாலுந்துலங்குகுணமொளியாதுபின்-தொன்மைதருபெரியோ
ர்மடிந்தாலுமவர்களது தூயநிறைதவறுகுமோ-மங்களகல்யாணிகு
றமங்கைசுரகுஞ்சரியைமருவுதிண்புயவாசனே-மயிலேறிவிளையாடு
குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௧௭)

நரகில்வீழ்வோர்

மன்னரைச்சமரில்விட் டோடினவர் குருமொழிமறந்தவர்கொ
லைப்பாதகர் - மாதாபிதாவைநிந்தித்தவர்கள் பரதாரமருவித்திரிந்
தபேர்கள் - அன்னங்கொடுத்தபேருக்கழிவையெண்ணினோ ராச

டக்கியவமைச்சர்-ஆலயமிகழ்ந்தவர்கள் விசுவாசகாதக ராருந்தவ ர்தமைப்பழித்தோர்-முன்னுதவியாய்ச்செய்தநன்றியைமறந்தவர் முகஸ்துதிவழக்குரைப்போர் - முற்றுசிவபத்தரை நடுங்கச்சின ந்தவர்கள் முழுதும்பொய்யுரைசொல்லுவோர் மற்றொருவர்வை த்தபொருளபகரித்தோரிவர்கள்மாநரகில்வீழ்வரன்றோ-மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௧௮)

சரீர சுகம்,

மாதத்திரண்டுவிசை மாதரைப்புல்குவது மறுவறுவிரோசனந் தான்-வருஷத்திரண்டுவிசை தைலந்தலைக்கிடுதல் வாரத்திரண்டுவி சையாம்-மூதறிவினொடுதனது வயதினுக்கிளையவொரு மொய்க்கு ழலுடன்சையோகம்-முற்றுதயிர்காச்சுபா னீர்மோருருக்குநெய் முதிராவழுக்கையிளநீர் சாதத்திலேவளவானாலும் புசித்தபின்முக ந்தனக்குவாங்கல்-தயையாகவுண்டபினுலாவலிவைமேலவர்சரீரசுக மாமென்பர்காண்-மாதவகுமாரிசா ரங்கத்துதித்தருற வள்ளிக்குக ந்தசரசா- மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவுகும ரேசனே (௧௯)

யார்க்குமனுபோகம்விடாமை

தேசுபெறுமேருப்ரதட்சணஞ்செய்துமதிதேகவடுநீங்கவில்லை- திருமாலுரங்கிடுஞ்சேடனுக்குவணன்செறும்பகையொழிந்ததில்லை ஈசன்கழுத்துலுறுபாம்பினுக்கிரைவேறிலாமலேவாயுவாகும்- இனி யகண்ணாகி வருபருதியானவனுக்கிராகுவோகனவிரோதி-ஆசிலாப் பெரியோரிடத்தினி லடுக்கினுமமைத்தபடி யன்றிவருமோ-அவா வர்தமனுபோக மனுபவித்திடல்வேண்டு மல்லால் வெறுப்பதெ வனா-வாசவனுமும்பரனைவரும்விஜயஜயவென்று வந்துதொழுதே த்துசரண மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகும ரேசனே (௨௰)

இதுவின்றி இதுசிறவாதெனல்

குருவிலாவித்தை கூரறிவிலாவாபணிபங்குணமிலாமனை வியா சைகுடிநலமிலாநாடுநீதியில்லாவரசு குஞ்சரமிலாதவெம்போர், தி ருவிலாமெய்த்திறமை பொறையிலாமாதவந்தியானமில்லாத நிஷ் டை-தீபமில்லாதமனை சோதரமிலாதவுடல் சேகரமிலாதசென்னி- உருவிலாமெய்வளமைபசியிலாவுண்டிபுகழுண்மையில்லாதவசன ம்-யோசனையிலா மந்திரிதயிரியமிலாவீரமுதவியில்லாதநட்பு-ம ருவிலாவண்ணமலர் பெரியோரிலாதசபை வையத்திருந்தென்பய ன்-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

பகைக்கப்படாதவரிவரெனல்

அரசர்பகையுந்தவம்புரிதபோதனர்பகையுமரியகருணீகர்பகை யும்-அடுத்துக்கெடுப்போர் கொடும்பகையுமுட்பகையுமருளிலாக்

கொலைஞர்பகையும் வீரகுமிகு மூரிலுள்ளோருடன் பகையுமிகுவிகடப்ரசங்கிபகையும்-வெகுசனப்பகையுமந்திரவாதியின்பகையும்விழை மருத்துவர்கள்பகையும் உரமருவுகவிவாணர்பகையுமாசான்பகையுமுறைவின்முறையார்கள்பகையும்உற்றதிரவியமுள்ளார்பகையுமந்திரிபகையுமொருசிறிதுமாகாதுகாண்-வாநதியின்மதலையென வினியசரவணமிசையில் வருதருணசிறுகுழவியே - மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே. (உஉ)

பேயெனப்படுவாரிவரெனல்.

கடனுதவுபேர்வந்து கேட்கும்வேளையின்முகங் கடுகடுக்கின்றபேயும்-கனமருவுபெரியதனம் வந்தவுடனிறுமாந்து கண்விழிக்காதபேயும் அடைவுடன்சத்துருவின் பேச்சுவிசுவாசித் தகப்பட்டழிகின்றபேயும்ஆசைமனையாளுக்கு நேசமாயுண்மைமொழி யானதையுரைத்தபேயும்-இடரில்லாமல்சிலர்கள் பெரியோர்களைச்சற்றுமெண்ணாதுரைத்தபேயும் இனியபரிதானத்திலாசைகொண்டொருவற் கிடுக்கண்செய்திட்டபேயும் ; மடமனையிருக்கப் பரத்தையைப்புணர்பேயும் வசைபெற்றபேய்களன்றோ-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே. (உ௩)

அவ்வவ்வினத்திலுயர்ந்தவை.

தாருவிற்சந்தான நதியினிற்கங்கைவிர தத்தினிற்சோமவாரம் - தகைபெறுநிலத்தினிற் காஸ்மீரகண்டந் தலத்திற்சிதம்பரதலம்-சீருலவுரிஷிகளில் வசிஷ்டர்பசுவிற்காம தேனுமுனிவரினாரதன் - செல்வநவமணிகளிற் றிகழ்பதுமராகமணி தேமலரிகம்போருகம்-பேருலவுகற்பினிலருந்ததிதிக்கில் பெலத்தின்மாருதம்யானையிற்-பேசிலைராவதந் தமிழினிலகத்தியம் பிரணவம்மந்திரத்தில்-வாரிதியிலேதிருப்பாற்கடல்குவட்டினின் மகாமேருவாகுமன்றோ-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே. (உ௪)

அவரவர்க்குப் பெலமாவன.

அந்தணர்க்குயர்வேத மேபெலங்கொற்றவர்க்கரியசௌரியமேபெலம்-ஆனவணிகர்க்குநிதி யேபெலஞ்சூத்திரர்க் காயினேருழவேபெலம்மந்திரிக்குச்சதுரு பாயமேபெலநீதி மானுக்குநடுவேபெலம்-மாதவர்க்குத்தவசு பெலமடவியர்க்குநிறை மானமிருகற்பேபெலம்-தந்திரமிகுத்தகன சேவகர்தமக்கெலாஞ் சாமிகாரியமேபெலம் - சான்றவற்குப்பொறுமையேபெலம்புலவோர் தமக்குநிறைகல்விபெலமாம்-வந்தனைசெயும்பூசைசெய்பவர்க்கன்புபெலம் வாலவடிவானவேலா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே (உ௫)

இருந்தும்பயன்படாதவை

தருணத்திலுதவி செய்யாதநட்பாளர்பின் தந்தென தாமலென்ன,
தாதரமறிந்துமுறை செய்யாதமன்னரைச் சார்ந்தென்னநீங்கிலென்

ன-பெருமையுடனுண்மையில் லாதவொருபிள்ளையைப் பெற்றென பெருமலென்ன-பிரியமாயுள்ளன்பிலாதவர்கணேசம் பிடித்தென்னவி ருக்கிலென்ன-தெருளாகமானமில்லாதவொருசீவனஞ் செய்தெனசெ யாமலென்ன-தேகியெனவருபவர்க்கீயாதசெல்வஞ் சிறந்தெனமுறிந் துமென்ன-மருவிளமைதன்னிலில்லாதகன்னிகைபின்பு வந்தெனவரா மலென்ன - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகும ரேசனே, (௨௬)

உபகாரமில்லாதவை

கடநீர்மிகுந்தென்னவொருதிதான்பெருத்தென்னகாட்டிலவுமலரிலெ ன்ன-கருவேல்பழுத்தென்னகாய்ப்பால்சுரந்தென்ன கானின்மழைபெ ய்துமென்ன-அடர்கழுதைலத்தினிலமெல்லாங்குவிந்தென்ன வரியகு ணமில்லாதபெண்-அழகாயிருந்தென்னவாஸ்தானகோழைபல வரிய நூலோதிலென்ன-திடமினியபூதம்வெகுபொன்காத்திருந்தென்ன திற ன்மிகுங்கரடியயிர்தான்-செற்வாசிநீண்டென்னவஸ்த்ரபூஷணமெலா ஞ் சித்திரத்துற்றுமென்ன-மடமிகுந்தவருக்குமுபகாரமில்லாத வ ம்பர்வாழ்வுக்குநிகராம்-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமே வுகுமரேசனே, (௨௭)

பதரெனப்படுவோர்

தன்பெருமைசொல்லியே தன்னைப்புகழ்ந்தபதர் சமர்கொண்டெ ளிக்கும்பதர்-தக்கபெரியோர்புத்தி கேளாதபதர்தோழர் தம்மொடுசலி க்கும்பதர்-பின்புகாணாவிடந் தன்னிலேபுரணிபல பேசிக்களிக்கும்பத ர்-பெற்றதாய்தந்தைதுயர் படவாழ்ந்திருந்தபதர் பெண்புத்திகேட்கு ம்பதர் - பொன்பணமிருக்கவே போயிரக்கின்றபதர் பொய்ச்சாட்சி சொல்லும்பதர்-புவியோர்நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி புண ர்தல்வெளியாக்கும்பதர்-மன்புணரும்வேசையுடன் விபசரிக்கின்றபத ர் மனிதரிற்பதரென்பர்காண்-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௨௮)

காணாவிடிற்றுயரப்படுமவை,

இரவிகாணாவனச மாரிகாணாதபயி ரிந்துகாணாதகுமுதம் - ஏந்தல் காணாநாடு கனைகள்காணாவோட மின்சொல்காணாவிருந்து-சுரபிகாணா தகன் றன்னைகாணாமதலை சோலைகாணாதவண்டு-தோழர்காணானேயர்க லைகள்காணாதமான் சோடுகாணாதபேடு-குரவர்காணாசபைதியாகிகாணா வறிஞர் கொழுநகாணாதபெண்கள்-கொண்டல்காணாதபயில் சிறுவர் காணாவாழ்வுகோடைகாணாதகுயில்கள்-வரவுகாணாதசெல விளைவெ லாம்புவிமீதில் வாழ்வுகாணாவிளமையாம்-மயிலேறிவிளையாடு குகனே யில்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௨௯)

வியாதிமூலங்கள்,

கல்லினான்மயிரினான் மீதூண்விரும்பலாற் கருதியவிசாரத்தினால்-
கடுவழிநடக்கையான் மலசலமடக்கையாற் கனிபழங்கறியுண்ணலால்
நெல்லினாலுமியினா லுண்டபின்மூழ்கலா னித்திரைகளில்லாமையால்
நீர்ப்பகையினாற்பனிக் காற்றிலுடனேதலா னீசெருக்கிலேயூறலால்-மெ
ல்லினல்லார்கலவி யதிகமுள்விரும்பலால் வீழ்மலஞ்சிக்குகையினால்-
மிகுசுமையெடுத்தலா லிளவெயிற்காய்தலான் மெய்வாடவேலைசெய
லால் வல்லிரவிலேதயிர்கள்சாகந்தியுண்ணலால்வன் பிணிக்கிடமென்
பர்காண்-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

செத்துஞ்சாகாதவர்,

அனைவர்க்குமுபகாரமாம்வாவிகூவமுண் டாக்கினோர்நீதிமன்னர்அ
ழியாததேவாலயங்கட்டிவைத்துளோரகாரங்கள்செய்தபெரியோர்-தலை
யொப்பிலாப் புதல்வனைப்பெற்றபேர் பொருதுசமர்வென்றசுத்தவீர
ர்-தரணிதனினிலைநிற்க வெகுநாளுமாறாத தருமங்கள்செய்தபேர்கள்-
கனவித்தைகொண்டவர்க ளோயாதகொடையாளர் காவியஞ்செய்த
கவிஞர்-கற்பினின்மிகுத்தவொரு பத்தினிமடந்தையைக் கடிமணஞ்
செய்தோர்களிம்மனிதர்கள்சரீரங்கள் போகினுஞ்சாகாத மனிதரிவ
ராகுமன்றோ - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகு
மரேசனே. (௯௧)

சாகாதிருந்துஞ்செத்தவர்,

மாறாதவறுமையோர்தீராதபிணியாளர் வருவேட்டகத்திலுண்போ
ர்-மனைவியைவழங்கியே சீவனஞ்செய்குவோர் மன்னுமொருராச ச
பையில்-தூறுகிந்தைசெய் துயருவோர்சிவிகைகள் சுமந்தேபிழைக்கி
ன்றபேர்-தொலையாவிசாரத் தழுந்துவோர்வார்த்தையிற் சோர்வுபட்
டுற்றபெரியோர்-வீறுகயனையாட னக்கஞ்சினந்திடு விருந்தினையொழி
த்துவிடுவோர்-வீம்புடன்செல்லாத விவகாரமதுகொண்டு மிக்கசபை
யேறுமசடர். மாறாகவிவரெலா முயிருடன்செத்தசவமாகியொளிமாய்
வர்கண்டாய் - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகு
மரேசனே. (௯௨)

சிறிதும்பயன்படாதவர்

பதராகிலுங்கன விருதிவிளைவிக்கும் பழமைபெறுசுவராகிலும்.பல்
ருக்குமறைவாகு மாடுரிஞ்சிடுமலம்பன்றிகட்குபயோகமாம்-கதமிகு
கடாவெண்ணிலுழுதுபுவிகாக்கும் வன்கழுதையும் பொதிசுமக்கும்-க
ல்லெனிற்றேவர்களு மாலயமுமாம்பெருங் கான்புற்றுமரவுமனையாம்-
இதமிலாச்சவமாகி லும்சிலர்க்குதவிசெயு மிழிவுறுகுரங்காயினும்-இ
ரக்கப்பிடித்தவர்க் குதவிசெயும்வாதுகோ லேற்றமாளிகைவிளக்கும்

மதமதமிகும்பரமலோபரா லுபகாரமற்றொருவருக்குமுண்டோ-மயி
லேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௧௩)

உலுத்தரியல்பு,

திரவியங்காக்குமொரு பூதங்கள்போற்பணந் தேடிப்புதைத்துவை
ப்பார்-சீலைகலமாகவுங் கட்டார்கணல்லமுது செய்துணாரறமுஞ்செயா
ர்-புரவலர்செய்கின்றதங் தனக்கும்வலுவாகப் புகுந்திருந் துக்குவார்-
புலவரைக்கண்டவுட னோடிப்பதுங்குவார்புராணிகர்க்கொன்றுமுதவா
ர்-விரகரிங்கேபிள்ளை சோறுகறிதின்னுமுளவில்வெகுபணஞ்செலவாகலா
ல் விளையாடுகிழவனும் பிள்ளையேபிள்ளையென விருதுசெட்டிசொன்ன
கதைபோல்-வரவுபார்க்கின்றதேயல்லாதுலோபியர்கள் மற்றொருவரு
க்கீவரோ - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகும
ரேசனே. (௧௪)

திருவாழிடங்கள்.

கடவாரணத்திலுங் கங்காசனத்திலுங் கமலாசனந்தன்னிலும் - கா
குத்தன்மார்பிலுங் கொற்றவரிடத்திலுங் காலியின்கூட்டத்திலும்-கட
மாவிபரியிலும் பொய்வார்த்தைசொல்லாத நல்லோரிடந்தன்னிலும்-
நல்லசுபலட்சண மிகுந்தமனைதன்னிலும் ரணசூரத்தவீரர்பாலும்-அ
டர்கேதனத்திலுஞ் சுயம்வரந்தன்னிலு மருத்துளசிவில்வத்திலும் -
அலர்தருகடப்பமலர் தனிலுமிரதத்திலு மதிககுணமானரூப-மடவா
ரிடத்திலுங் குடிகொண்டுநிதமாது மாறாதிருப்பளென்றே - மயிலேறி
விளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௧௫)

மூதேவிவாழிடங்கள்

சோரமங்கையர்கணிச முறையார்கள்வாயினிற் சூதகப்பெண்கணி
ழலிற்குளையிற்சூழ்கலுழுபுகையிற்களோபாஞ் சுடுபுகையினீசர்நிழலிற்
காரிரவிலரசுநிழலிற்கடாநிழலினொடு கருதியவிளக்குநிழலில் காமுகரி
கிஷ்டையில்லாதவமுகத்திற் கடுஞ்சினத்தோர்சபையினில்-ஈரமில்லாக்
களர்நிலத்தினிலிராயிலிரவித்தழியுமதுபானபாலில்- இலைவேல்விளவி
நிழலினிதமழுக்கடைமனையிலெண்ணாயகசரத்தூன் - வாசமுறத்தூள்
பெருக்குதூண்மூதேவிமாறாதிருப்பளென்பார் -மயிலேறிவிளையாடுகு
கனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௧௬

திருத்தினுந்திருந்தாமை;

கட்டியெருவிட்டுச் செழுந்தேனைவார்க்கினுங் காஞ்சிரங்காய்ப்
பினிடுமோ - கழுதையைக்கட்டிவைத் தோமம்வளர்க்கினுங் கதிபெ
றுங்குதிரையாமோ - குட்டியரவுக்கமு தளித்தேவளர்க்கினுங் கொடு
விஷமலாது தருமோ - குக்கனெடுவாலுக்கு மட்டையைக் கட்டி
னுங் கோணுமலை நிமிருமோ - ஒட்டியேகுறணிமை யிட்டாலுமய
விலாபோனிகண் ணாகிவிடுமோ - உலவுகணைகற்பூர வாடைபலகூட்

டினுமுள்ளியின்குணமாறுமோ - மட்டிக்காயிரம் புத்திசொன்னாலும மதின் மார்க்கமரியாதைவருமோ-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௧௭)

குறிப்பறிதல்.

மனதிற்கடும்பகை முகத்தினாலறியலாமாநிலப்பூடுகளெலாம்-மழையினாலறியலா நல்லோர்பொல்லார்தமை மக்களாலறியலாகும்-கனமருவு சூரரைச் சமரினாலறியலாங் கற்றவொருவித்துவானைக்- கல்விப்ரசங்கத்தினாலறியலாங்குணங்களை நடையினாலறியலாம்-தனதகயடுத்ததுபளிங்கினாலறியலாம் சாதிசொல்லாலறியலாம்-தருநீதிகேள்வியாலறியலாம்பிணிகளைத் தாதுக்களாலறியலாம்-வனசவிகசிதவதனபரிபூரணானந்த வாலவடிவானவேலா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௧௮)

குணமாறாமை,

குணமிலாத்துஷ்டமிருகங்களையுநயகுணங் கொண்டுட் படுத்திவிடலாம்-கொடியபலவிஷநோய்களியாவுமௌஷதமது கொடுத்துத்திருப்பிவிடலாம்-உணர்விலாப்பிரமராக்ஷசி முதற்பேய்களை யுகந்துகூத்தாட்டிவிடலாம்-உபாயத்தினாற்பெரும் பறவைக்குநற்புத்தி யுண்டாக்கலாமுயிர்பெறப்-பிணமதையெழுப்பலா மக்கினிசுடாமற்பெரும்புனலெனச்செய்யலாம்-பிணியையுமகற்றலாங் காலதூதுவரையும்பின்புவருகென்றுசொல்லலாம்-மணலையுங்கயிறுத்திரிக்கலாங் கயவர்குணமட்டுந்திருப்பவசமோ-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே; (௧௯)

இத்தீக்குணத்தோரிவ்விலங்குபோல்வரெனல்

தான்பிடித்ததுபிடிப் பென்றுமேலவர்புத்தி தள்ளிசெய்வோர்குரங்கு-சபையிற்குறிப்பறியமாட்டாமனின்றவர் தாம்பயனிலாதமரமாம்-வம்பினுலெளியவரை யெதிர்பண்ணிநிற்குமொருவெறியர் குணாஞமவியாவார் மிகநாடிவருவோர் முகம்பார்த்திடாலோபர் மேன்மையில்லாதகழுதை - சோம்பலொடுபெரியோர்சபைக்குட்படுத்திடுந் தூங்கலேசண்டிக்கடா-சூதுடனடுத்தோர்க் கிடுக்கணைசெய்திடுந்துஷ்டனே கொட்டுதேளாம்-மாம்பழந்தனைவேண்டி யந்நாளிலீசனைவலமாகவந்தமுருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே,

அற்பர்வாழ்வால்குணம்வேறுபடுதல்

அற்பர்க்குவாழ்வு சற்றதிகமானால்விழிக்கியாவருருவுந்தோன்றிடா-தண்டியின்றேநல்ல வார்த்தைகளுரைத்தாலு மவர்செவிக்கேறிடாது-முற்பக்ஷமானபேர் வருகினும்வாருமெனமொழியவும்வாய்வராதுமேதியேவாதப்பிடிப்புவந்ததுபோல முன்காலைபகலவைப்பார்-விற்பனமிகுந்தபெரியோர் . செய்திசொன்னாலும்வெடுவெடுத்தேசிறிப்பார்-விருதாமகத்துவப்பேயது சவுக்கடிவிழும்போது தீருமென்பார்-மற்புயந்த

னீபமாலையணிலோலனேமார்பனேவடிவேலவா- மயிலேறிவிளையா
டுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௪௧)

இத்தீங்குளோரிக்கோல்போன்லவெனல்

அன்னைதந்தையர்புத்திகேளாதபிள்ளையோ வஷ்டமச்சனியாகுவான்-அஞ்சாமலெதிர்பேசிசிற்றுமனையாள்வாக்கி லங்காரகச்சன்மமாம்-தன்னைமிஞ்சிச்சொன்ன வார்த்தைகேளாவடிமைசந்திராஷ்டகமென்னலாம்-தன்பங்குதா வென்றுசண்டையேறுதம்பியோசார்ந்தசன்மச்சூரியன்-தன்னையிலாதவஞ்சனைசெய்ததமையன்மூன்றாமிடத்தில் வியாழம்-நாடொறும்விரோதமிடு கொண்டோன்கொடுத்துளோன் ராகுகேதுக்களெனலாம மன்னயனைபன்றுசிறை தனிலிட்டும்பற்றுமந்திரமூரைத்தகுருவே-மயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௪௨)

நல்வினைஞ்சேர்பயன்

சந்தனவிருக்ஷத்தையண்டிநிற்கின்றபலதருவுமவ்வாசனைதரும்- தங்கமேருவையடுத்திருங் காக்கையுஞ் சாயல்பொன் மயமேதரும்-பந்தமிருபாலுடன் விளாவிய தண்ணீரெலாம் பால்போனிறங்கொடுக்கும்- படிகமணிகட்குளேநிற்கின்ற வடமுமப்படியேகுணங்கொடுக்கும்- அந்தமிகுமரகதக்கல்லைச் சரித்திடி லடுத்ததும்பசுமையாகும் - ஆனபெரியோர்களொடு சகவாசமதுசெயிலவர்கள்குணம்வருமென்பர்காண் - மந்திரநெடுங்கிரியின்முன்க - ல்கடைந்தவரிமருகமெய்ஞ்ஞானமுருகா மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௪௩)

வலியோரையுமூழ்விடாமை.

அன்றுமுடிசூடிவதிருக்க ரகுராமன்மு னருங்காடுறைந்ததென்ன-அண்டரெல்லாமமிர்த முண்டிடப்பாமனுக் காலம்லபித்ததென்ன-வென்றிவருதேவர்சிறைமீட்டநீகளவில்வேடிச்சியைச்சேர்ந்ததென்ன-மேதினிபடைக்குமயனுக்கொருசிரம்போகிவெஞ்சிறையிலுற்றதென்ன-என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோனதென்னகாண்வல்லமையினுல்-எண்ணத்தினாலொன்றும் வாராது பரமசிவனெத்தனைப்படிமுடியுமாம்-மன்றுதனிநடனமிடு கங்காதரன்பெற்றவரபுத்ரவடிவேலவா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

பெரியோர்வாக்கியபரிபாலனஞ்செய்தோர்

தந்தைதாய்வாக்யபரிபாலனஞ்செய்தவன் தசரதகுமாரராமன்-தமயனருள்வாக்யபரிபாலனஞ்செய்தோர்கடிருமனுக்கிளையநால்வர்-சிங்கையிலுணர்ந்ததுருவாக்யபரிபாலனஞ் செய்தவனரிச்சந்திரன்-தேவியென்றோர்க்கில்லையெனுவாக்யபாலனஞ்செய்தவன்றுனகர்ணன்திண்மை

தவிர்வாக்கியபரிபாலனம்செய்தவரீள் மெலயிருத்தவனுமான்- நிறை
யுடன்பத்தாவின் வாக்கியபரிபாலனநிலத்தினிவளாகினிசெய்தாள்ம
க்கைவழிகோயில்குளமுங்குலவுதும்பிமுகன் மகிழ்தரவுகந்த துணை
வா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனிடுமலைமேவுகுமரேசனே ()

முயிற்சியின்மிக்கதுமெனல்.

வங்காளமேறுகினும் வாருகோலொருகாசு மட்டின்றியதிகமா
மோ வானேறியுயரப்பறந்தாலுமூர்க்குருவி வண்ணப்பருந்தாகுமோ
கங்காசலந்தனின்மூழ்கினும் பேய்ச்சுரைக்காய் நல்லசுரையாகுமோ-
கடலுக்குள்நாழியையமுக்கியே மொண்டிற்காணுமோ நாலுழிதான:
ஐங்காதமோடினுந்தன்வினைக டன்னுடேயடையாமனீங்கிவிடுமோ-
ஆரிடஞ்சென்றாலும்வெகுதொலைகள்சுற்றினு மமைத்தபடியன்றிவரு
மோ-மங்காதசெந்தமிழ்க்கொண்டு நக்கீரற்குவந்ததுயர்தீர்த்தமுருகா
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (சசு)

இடும்பாலழிவு

சூரபத்மன் பெலமு மிராமனைன்றீரமுந் துடுக்கானகஞ்சன்வலியும்
துடியானவிரணியன்வரப்ரசாதங்களுந் தொலையாதவாலிதிடமும்பா
ரமிகுதுரியோதனுதினூற்றுவர துபராக்ரமமுமதுகைடவர்-பாரிப்புமா
பெலிதனுண்மையுஞ்சோமுகன்பாங்கிலுறுவல்லமைகளும்- ஏரணவு
இசகன்கனதையுந்திரிபுர ரெண்ணமுந்தக்கனெழிலும்-இவர்களது சம்
பத்துமின்றவோவவரவரிடும்பாலழிந்ததன்றோ-மாரனைக் கண்ணுலெரி
த்தருள் சிவன்றந்தவரபுத்ரவடிவேலவர்மயிலேறிவிளையாடு குகனேபு
ல்வயனீடு மலைமேவுகுமரேசனே (சஎ)

மாமதியின்முபலானத சேய் வழிக்கேய்ந்துவளருமப்போதுவள
ரும்-வாவிதனிலாம்பல்கொட்டிகளதனினீர்வற்றின வற்றிடும்பெருகி
லுயரும்-பூமருவுபுதல்பூடுகோடையிற்றியங்கிடும்பொங்குகாலந்தழைக்
கும்-புண்டரிகமிரவிபோமளவிற்குவிந்திடும்போதுதயமாகின்மலரும்
தேமுடவிளக்கிலுயிர்கூடவுமிளக்குமதுர்தறிலுயிருஞ்சிறக்கும்-சேர்
ந்தோர்க்கிடுக்கணதுவந்தாலு நல்லோர்சினேகமப்படியாகுமோ-வாம
னசுரூபமதயானை முகனுக்கிளைய வாலகுருபரவேலவா-மயிலேறிவி
ளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (சஅ)

கைப்பலனுமவை.

மருவத்திலேபெற்ற சேயும்புரட்டாசி பாதிசம்பாகோகையும்- பலமி
னியவாடிதனி லானைவால்போலவே மயிர்கொண்டுவருகரும்பும் கரு
ணையொடு மிக்காணயமுளோர் கையினிற்சட்டனிட்டு வைத்தமுதலு

ம்-காலமதுநேரிற்றனக்குறுதியாகமுன்கற்றுணர்ந்திடுகல்வியும்- விருந்தரசரைக்கண்டுபழகியசினேகமும்விவேகிகட்குபகாரமும்-வினைவிலவைவெயலாங்கைப்பலனதாகவபிவிர்த்தியாய்வருமென்பர்காண் - மருவுலாவியநீபமாலையுந்தண்டரளமாலையும் புனையார்பனே-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௨௪)

சமயத்துக்குதவாதவை

கல்லாதுபுத்தகந்தனிலெழுதிவீட்டினிற் கட்டிவைத்திடு வித்தையும், காலங்களுக்குதவவேணுமென்றன்னியன் கையிற்கொடுத்தபொருளும். இல்லாளைநீங்கியே பிறர்பாரிசமென்றிருக்கின்ற குடிவாழ்க்கையும். ஏறுமாறாகவேதேசாந்தரம்போயிருக்கின்றபிள்ளைவாழ்வும் சொல்லானதொன்றுமவர் மனமானதொன்றுமாச் சொல்லும்வஞ்சகர்நேயமும், சுகிப்பமாயுண்டென்றிருப்பதெல்லாந்தருண துரிதத்திலுதவாதுகாண்,வல்லானகொங்கைமடமாதுதெய்வானைகுறவள்ளிபங்காளனேப. மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

ஆட்ரவின்வாயினிலகப்பட்ட தவளையு மானைவாயிற்கரும்பும்,ஆரிநானசப்பலிற்பாய்மரக்காற்றினிலகப்பட்டுமெலிகாக்கையும்,காட்டியவேதாரைவார்த்துக் கொடுத்ததுமன்கைக்குளானவுயிரும் -சலமாகவேயணைகடந்திட்டவெள்ளமூசாய்வேட்டைபட்டமுசலும், தேடியுணபார்கைக்குளானபல வுடைமையுந்தீவாதையானமனையும், திரள்கொடுங்கோலரசர்கைக்கேறுபொருளுமே திரும்பிவாராதென்பர்காண் மாடமிசையன்னக்கொடித்திரள் கொள்சோணாடு வாழவந்திடுமுதல்வனே. மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ()

இதினுமிதுநன்றென்பவை,

கடுகடுத்தாயிரஞ் செய்குவதிலின் சொலாற்களிகொண்டழைத்தனன்று, கனவேள்வியாயிரஞ் செய்வதிற் பொய்யுரைகருதகொடுசொலாமைநன்று-வெகுமதிகளாயிரஞ் செய்வதினைக்காசு வேளைகண்டுதவனன்று. சடுதியிற்பக்குவஞ்சொல்லுங்கொடைக்கிங்குசற்றுமில்லையெனன்று -சம்பத்துடன்பிணியின்மெலிகுவதினுயற்றதாரித்திரியநன்றுகாண்;மடுவினிற்கரியோலமென்னவக்கருள்செய்தமால்மருகனாமுதல்வா. மயிலேற்விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௫)

பலகூடிலும்ஒன்றிற்கீடாகாதவை

தாரகைகளொரு கோடிவானத்திருக்கினுஞ்சந்திரற்கீடாகுமோ தாருவிற் கொடிதொனிகள் பலகூடினுமொரு தம்பட்டவோசையாமோ கோரமிகுபன்றியின் குட்டிபலகூடிஞெரு குஞ்சரக்கன்றாகுமோ, கொட்டிமலர் வாவியிற் பலகூடினுமொரு சே

கனகமலராகுமோ - பாரமிகுமாமலைகள்பலகூடினாலுமொரு பைம்பொன் மகமேருவாமோ, பலனிலாப்பிள்ளைகளனேகம்பிறந்தாலும் விற்பனனொருவனுக்குநிகரோ, வாரணக்கொடியொரு கரத்திற்பிடித்தொன்றில் வடிவேலணிந்தமருகா. மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே; (௫௩)

அருமையறிதல்,

மணமாலையருமைப் புனைபவர்களேயறிவர் மட்டிக்குரங்கறியுமோ-மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறியவர் மலடிதானறிவதுண்டோ-கணவருடையருமையைக் கற்பானமாதறிவள் கணிகையானவளறிவளோ-காத்துமொரு சத்தியின்பாண்டமென்பதைவருங் களவாணராயறியுமோ - குணமானகிளியருமை தனைவளர்த்தவரறிவர் கொடியபூனையுமறியுமோ-குலவுபெரியோரருமை நல்லோர்களேயறிவர் பொருமூடர்தாமறிவரோ-மணவாளனீயென்று குறவள்ளிபின்றொடர வலைமூடுகிழவுமழகா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௫௪)

தீச்சார்பாற்பயன்படாதவை

மடுவினிற்கஞ்சமலருண்டொருவருங்காமல் வன்முதலையங்கிருக்கும்-மலையினிற்றேனுண்டு சென்றொருவர்கிட்டாமன் மருவியதில் வண்டிருக்கும்-செம்மைதிகழ்தாழைமலருண்டொருவருங்காமனீங்காதமுள்ளிருக்கும்-நீர்பலசந்தன விருக்ஷமுண்டணுகாது நீளவுஞ்சூழ்ந்திருக்கும் குடிமல்கிவாழ்கின்ற வீட்டினிற்செல்லாது குரைநாய்களங்கிருக்கும்-கொடுக்குந்தியாகியுண்டிடையூறு பேசுங்கொடும்பாவி யுண்டுகண்டாய்-வடிவையுங்கலைவையும் பொருவுமிரு கன்னிகுறவள்ளிக்குகந்தகணவா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௫௫)

கணிகையரிழிவு,

தேவதாசிகள்வீடு சந்தைப்பெரும்பேட்டை சேர்ந்திடும்படுக்கைவீடு-தெருவாசல்கட்டில்பொதுவப் பலருந்தத்தகுகில்செய்யசூதாடுசோலை-மேவலாகியகொங்கை கையாடுதிரள்பந்து விழமனைங்கவர்தூண்டிலாம்-மிக்கமொழிநீர்மே லெழுத்துதிடமோமொரு மின்னலிருதுடைசர்ப்பமாம்-ஆவலாகியவல்குலோதண்டம்வாங்குமிட மதிகபடமாமனதுகல்-அமிர்தவாயிதழ்சித்திரசாலையெச்சிற் குழியவர்க்காசை வைக்கலாமோ-மாவடிவுகொண்டேயொளித்தவொருசூரனை வதைத்தவடிவேலாயுதா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௬)

கலிகாலக்கொடுமை,

தாய்புத்திசொன்னால் மறுத்திடுங்காலமுயர் தந்தையைச்சீறுகாலம் சற்குருவைநிந்தைசெய்காலமெய்க்கடவுளைச் சற்றுமெண்ணாதகாலம் பேய்தெய்வமென்றுபசரித்திடுங்காலம்புரட்டருக்கேற்றகாலம்-பெண்

டாட்டிவையினுங் கேட்கின்றகாலகற் பெரியசொற் கொளாதகாலம்-தெய்வமுன்பெரியவன்சிறுமையுறுகாலமிகுசிறியவன் பெருகுகாலம்: தெருவில்விட்டோடினோர்வரிசைபெறுகாலம்வசைசெப்புவோர்க்குதவுகாலம்-வாய்மதம்பேசிவிடுமெளியர்பகாரர்க்குலாய்த்தகலிகாலமையா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௫௭)

அலாவர்க்குரியவை

கல்வியொடுநிகழுறச்சபையின்மேல்வட்டமாக் காணவைப் போன்பிதாவாம், கற்றுணர்ந்தேதனது புகழாம்பிரபாவைப்பிரகாசஞ் செய்வோன்புத்திரன் செல்வமிகுகணவனே தெய்வமென்றனுதினஞ் சிந்தைசெய்பவள்மனைவியாம் சினேகிதன்போலவே யன்புடைத்துன்மைமொழிசெப்புமவனேசோதரன்தொல்வளமிகுந்தநாற்கனைதெரிந்துறுதிமொழிசொல்லுமவனேகுருவனும்-சொன்னநெறிதவறாமல் வழிபாடுசெய்துவரு மய்யனேயினியசீஷன்-வல்விரகமிஞ்சு சாருஞ்சரியுடன்குறவர் வஞ்சியைமணந்தகணவா மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௫அ)

சிறுமையில்பெருமை

சேற்றிற்பிறந்திடுங் கமலமலர்கடவுளது திருமுடியின்மேலிருக்கும் திகழ்சிப்பியுடலிற் சனித்தமுத் தரசனது தேகத்தின் மேலிருக்கும்-போற்றிபுழுப்பூச்சியின் வாயினூல்பட்டென்று பூசைக்குநேசமாகும், புகலரியவண்டெச்சிலானதேன்றேவர்கொள்புனிதவபிஷேகமாகும்சாற்றியபுலாலொடு பிறந்தகோரோசனை சவாதுபுழுகனைவர்க்குமாய்-ஜாதியீனத்திற்பிறக்கினுங்கற்றோர்களச்சபையின்மேல் வட்டமன்றோ மாற்றிச்சுரத்தினை விபூதியாலுடல் குளிரவைத்த மெய்ஞ்ஞானமுதலே மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே, (௫௯)

செயத்தகாதவை,

தானுசரித்துவருதெய்வமிதுவென்றுபொய்ச் சத்தியஞ் செயில்விடாது-தன்வீட்டிலேற்றியவிளக்கென்று முத்தங்களைக்கொடுத்தாலதகைடும்-ஆனாலுமேலவர்கள் மெத்தவந்தனமென்றடாதுசெய்யிற்கெடுதியாம்-ஆனைதான்மெத்தப்பழக்கமானாலுஞ் செபாதுசெய்தாற் கொன்றிடும்-திறனதினிதென்றமீதால்விரும்பினாற் றேகபீடைகளேதரும் ஜெகராசர்சனுவென்ன மேலாககாரியஞ் செய்தான்மனம்பொறார்காண்-வானுடுபுகழுமொரு சோணடுதழையவிவணவந்தவதரித்தமுதலே மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௬௰)

நடுவுநிலைமை

வந்தவிவகாரத்தி னினியபரிதானங்கள் வருமென்றநேசமென்றும்-அன்பனைகளுரென்றுமயலோரென்று மிக்கதனவானென்று மேழையெ

ன்றும்-இந்தவகையைக்குறித்தொரு பக்ஷபாதமேயொன்னள வுரைத்திடாமல்-எண்ணமுடனே விகித்தியொடு சாக்ஷிக்குமேற்கச்சபாசமதமா-மூன்றவிருதலையுஞ்சமன்செய்த கோல்போன் மொழிந்திடற் றர்மமதுகாண்-முனிவர் மனுவுடல்பாதி மிருகந்தனக்கென்றுமுன் றருமர்சொன்னதலவோ-மைந்தனெனவன்றுமைமுலைப்பால்கொடுத்திட வளர்ந்தருள் குழந்தைவடிவே மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௬௧)

பக்ஷபாதம்,

ஓரவிவகாரமாவந்தவர்முகம்பார்த் துரைப்போர்மலைக்குரங்காம்,உயர்வெள்ளெருக்குடன் முளைத்துவிடுமவரில்ல முறையுமூர் பாழ்த்திடுமாம்-தாரணியிலிவர்கள்கிளை செல்லியிலேபோலுகுஞ்சமானமா வெருபிறப்பும்-சந்ததியிலாதுழல்வரவர்முகத்திலின்மூத்ததையலே குடியிருப்பாள்-பாரமிவரொன்றபுவிமங்கையுநடுக்குவள் பழிக்கதுர் மரணமாவர்-பகர்முடிவிலேரௌரவாதிநரகத்தனுபவிப்பரெப்போதுமென்பார்-வாரமுடனருணகிரிநாதருக்கனுபூதிவைத்தெழுதிய நள் குருபரமயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே, (௬௨)

ஒன்றிலாமையாற்சிறவாதவை,

கொங்கையில்லாதவட்கெத்தனைப்பணியுடைமை கூடினும் பெண்மையில்லை-கூறுநிறைகல்வியில்லாமலெத்தனை கவிதைகூறினும் புலமையில்லை-சங்கையில்லாதவர்க்கெத்தனைவிவேகந் தரிக்கினுங்கனதையில்லை-சட்சுவைபதார்த்தவகையுற்றாலுநெய்யிலாச்சாதமுந்திருத்தியில்லை பங்கயமிலாமலெத்தனைமலர்கள்வாவியிற் பரித்துமேன்மையில்லை-பத்திஇல்லாமல்வெகு நியமமாயர்ச்சனைகள்பண்ணினும்பூசையில்லை-மங்கையிலாமனைக்கெத்தனையருஞ்செல்வம் வரினுமில் வாழ்க்கையில்லை மயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே ()

அளவுபடாதவை

வாரியாழத்தையும்புனலெறியுமலைகளையுமானிடர்கள் சனனத்தையும் மன்னவர்கணினைவையும்புருஷர்யோகங்களையும் வானினுயர்நீளத்தையும். பாரிலெழுமணலையும பலபிராணிகளையும் படியாண்ட மன்னவரையும் பருப்பதத்தின்னிறையுமீசுரச்செயலையும் பனிமாரி பொழிதுளியையும்-சிறியதமிழ்ப்புலவர்வாக்கிலெழுகவியையுஞ் சித்தர்தமதுள்ளத்தையும் - தெரிவையர்கள்சிந்தையையு மிவ்வளவெனும்படிதெரிந்தளவிடக்கூடுமோ-வாரிசமடந்தைகுடி கொண்டநெடுமாலுக்குமருகனெனவந்தமுருகா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௬௪)

பிறர்மனைநயத்தல்

தக்காரமன்றிபேபரதாரமேனினைவு தனைவைத்தகாமுகர்க்கு- த

தயையில்லை நிசமில்லை வெட்கமில்லைசமரினிற் றைரியஞ்சற்றுமில்லை அந்தாரமில்லை தொடர் முறையில்லை நிலையில்லையறிவில்லை மரபுமில்லை பறமில்லை நிதியில்லையிரவினிற் றனிவழிக்கச்சமோ மனதிலில்லை சந்தாதசணமில்லை பிணமில்லை யெவருக்குநட்பில்லை கனதையில்லை நயமில்லை விளைமைதனில்வலுமையில்லை முகத்தெபெறுஞானமில்லை யென்பர்கண்டாய் மந்தாரபரிமளசுகந்தத்திருப்புயமார் மாபமேன யருவாளனே மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே (௬௫)

மானம்விடாமை

கன்பாரமேறிற் பிளக்கிடுவதன்றியே கற்றூண்வளைந்திடாது-கருத்தலர்களாலுடைந்தாலு முயிராளவிலைகளஞ்சூர வமரின்முதுயான - தினமோரிசிக்கண்வசத்துற்றாலும் வேங்கைதீதால் சீவனவிற்கொடாது-சிரமானபெரியோர்சரீரங்கள் போகினுந்தெசப்புமுறைதவறிடார்கள் வணமேறு கவரிமாவுயிர்போகுமளவுந்தன் மயிர்ரொன்றுங்கொடாது-வாராத்வாபத்துவருகினுங்கற்புடைய மாதுநிறைதவறிடவாள் மனதாரவுனதடைக்கலமென்றகீரற்கு வனசிறைதவிர்த்தமுருகா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே, (௬௬)

திருவருட்சிறப்பு

திருமகள்கடாக்ஷமுண்டானவர்க்குஞ்சிறப்புண்டு கனதையுண்டு-சென்றவழியெல்லாம் பெரும்பாதையாய்விடுஞ் செல்லாதவார்த்தைசெல்லும் பொருளொருதுரும்புமரியாதையாஞ் செல்வமோபுகல்பெருக்காதுபோலாம் புவியின்முன் கண்டுமதியாதபேர்பழகினவர்போலவேநேசமாவார் பெருமையொடு சாதியிலுயர்ச்சிதரு மனுநினம்பேரும்ப்ரதிஷ்டையுண்டாம் பிரியமொடுபகையாளி கூடவுறவாகுவான் பேச்சினிற்பிழைவராது-வருமெனநினைந்தபொருள்கைகூடிவருமதிகவல்லமைகண் மிகவுமுண்டாம் மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே (௬௭)

நட்புநிலை

கதிரவனுதிப்பதெங்கேகளினமெங்கே களித்துளமலர்ந்ததென்ன-கார்மேகமெங்கே பசுந்தோகையெங்கே கருத்தினட் பானதென்ன-மதியமெங்கேயருங்குமுதமெங்கே முகமலர்ந்துமகிழ்கொண்டதென்ன-வல்லிரவுமிடிவதெங்கே கோழியெங்கே மகிழ்ந்துகூவிடுவதென்ன மிதிரசனெங்கே யிருந்தாலுமவர்களொடு நேசமொன்றாயிருக்கும்-நீதிமிகுநல்லோர்களெங்கிருந்தாலுமவர் நிறைபக்ஷமறவார்கள்காண் மதிலுடன்கோபுரமும் வாவியும்புடைசூழ மருவுசேரணுட்டதிபனே மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனிமலைமேவுகுமரேசனே (௬௮)

காலமறிதல்.

காகம்பகற்காலம்வென்றிடுங்கூகையைக்கனகமுடி யரசர்தாமும்-கருதுசயகாலமதுகண்டுசந்தவேளையிற் காரியமுடித்துவிடுவார் - மேகமுங்கார்காலமதுகண்டுபயிர்விளைய மேன்மேலுமாரிபொழியும்-மிக்கானவறிவுளோர்லருதருணகாலத்தின் மிடியாளருக்குதவுவார்-நாகரிக முறுகுயில்வசந்தகாலத்திலே நலமென்றுகக்துகூவும் - நல்லோர்குறித்ததைப்பதருமலர்தங்க நாளையின்முடிப்பர்கண்டாய்-வாகனையகாலைகண்மாலைபுல்லெனுமூலகவாடிக்கைநிசமல்லவோ மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௬)

இடனறிதல்,

தரையதனிலோடுதேர்நீள்கடலிலோடுமோ சலதிமிசையோடுகப்பல்-தரைமீதிலோடுமோதண்ணீரிலுறுமுதலைதன்முனேகரிநிற்குமோ-விரைமலர்முடிப்பரமர் வேணியரவினைவெல்ல மிகுகருடனாலாகுமோ வேங்கைகளிருக்கின்ற காடுதனிலஞ்சாமல் வேறொருவர்செல்லவசமோ-துரைகளைப்பெரியோரையண்டிவாழ்வோர்தமைத் துஷ்டர்பகையென்னசெய்யும்-துணைகண்டுசேர்விடமறிந்துசேரென்றௌவை சொன்னகதைபொய்யல்லவே-வரையூதுமாயனையடுத்தலாற்பஞ்சவர்கள் வன்போர்செயித்ததன்றோ-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௰)

ஆக்கைநிலையாமை;

மனுநன்மாந்தாதாமு தலானவர்களெல்லாருமண்மே லிருந்துவாழ்ந்துமடியாதிருந்தபேரில்லையவர்தேடியதை வாரிவைத்தவருமில்லை-பனியதனைநம்பியேயோர்பூட்டுகதைவெனப் பாழானவுடலைநம்பிப்-பார்மீதிலின்னம்வெகுநாளிருப்போமென்று மேலகோடிநினைவையெண்ணி-அனிதமாய்விருதாவின்மாய்வதேயல்லாம லன்பாகநின்பதத்தை-யர்ச்சித்துமுத்திபெறல்வேண்டுமென்றெண்ணுறார்களாசைவலையிற்சுழலுவார் வனிதையர்கள்காமவிகாரமேபகையாகுமற்றுமொருபகையுமுண்டோ மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ()

வேட்டகத்திகழ்ச்சி.

வேட்டகந்தன்னிலேமருகன்வந்திடுமளவின்மேன்மேலுமுபசரித்து விருந்துகள்சமைத்துநெய்பாற்றயிர்பதார்த்தவகை வேண்டுவவெலாமமைப்பார்-ஊட்டமிகுவர்க்கவகைசெய்திடுவர் தயிலமிட்டுறுதியாமுழுகுவிப்பார்-ஒயாதுஇன்னவேபாக்கிலைகொடுத்திடுவ ருற்றநாளுகிலோநாட்டமொருபடியிறங்குவதுபோல் மரியாதைநாளுக்குநாள்குறைவுறும்-நகைசெய்வர்மைத்துனர்கலவல்பார்போவென்று நாணுமன்மாமிசொல்வாள்-வாட்டமனையாளொருதுரும்பாய்மதிப்பவளவன்மட்டியிலுமட்டியன்றோ - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௨)

செல்வமில்லாமை.

ஓடமிடுமிடமதுமணற்சுடுங்கட்டாறு மோடமேவண்டிமேலேறும்
உற்றதோராற்றின்மடு மேடாகுமேடெலா முறுபுனல்கொண்மடுவாயி
டும் நாடுகாடாகுமுயர்காடுநாடாகிவிடு மல்லுங்கமேல்பிறகராய் - கடை
யூர்க்கைதபலகூர்முடனேகலைபுரின்னிலவுமிருளாய்விடும்- நீடுபகல்
போயபின்பிரவாகுமிரவுபோய்ப் பகலாய்ப் போதாயவிடும் - நிதிபோர்
மிடித்திடுவர்மிடிபோர்செழித்திடுவர் சேமலல்லவாழ்வு கண்டாய்-மாடமை
னைபரிசனமக்கணிதிருஷமணமாமருவுகமலாகுமன்றே-மயிலேறிவிளை
யாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (எ௩)

பிறந்தாற் பெறுபேறு.

சட்டமொன் றெடுத்தாற்பு விக்குநல் லவனென்று தன்பேர்விளங்கவே
ண்டும்-சதிருடனிதல்லாது மெய்த்தானியென் றவதரிக்கவே வேண்டு
மல்லால்-திடமினிபரணசூரனியனென்னவே திசைமெச்சவேண்டு
மல்லால்-தேகிபெனவருபவர்க்கில்லையென்றவலை செய்யவேவேண்டு
மல்லால் அடைவுடன்பலகல்வியாராய்ந்து வித்துவானாக வேவேண்டுமெ
ல்லால்-அறிவானதுறைமக்களாகவரவேண்டுமிலாதிருப்பாலரையா-மட
குருவடிக்கிடென வெழுகடலுமலைபெரியமணிபுரகன் முடிகளெறிய
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (எச)

வேசைநிந்தை,

தேடித்தம்வீட்டிற்பணக்காரர்வர்க்கிறக்கிற்றகேசிவன்போலவே- இனை
க்கவும்மையொருபொழுதுகாணாதவிடில் செல்லுமுயிரென்னமென்றே-கூ
டிச்சுகிப்பரென்னுசையுடன்மேலென்று கூசாமலாணையிடுவர்-கொங்கை
யைவெளிக்கப்பிடிக்கக்கொடுத்திதழ்கொடுப்பர்சும்மனமுகப்ப- வேடிக்
கைபேசியேனைமுதல்பறிக்கபின்வேறு-படநிந்தைசெய்து விடவிடப்
பேசுவார்தாய்கலகமூட்டியே விட்டுத்துரத்திவிடுவார்-வாடிக்கைபாவி
ந்தவண்டப்பரத்தையர்மபக்கத்தைநம்பலாமோ- மயிலேறிவிளையாடு
குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (எரு)

இதம்கிது உறுதியெனல்.

கைக்குறுதிவேல்வின்மனைக்குறுதிமனையாள்கவிக்குறுதிபொருளட
க்கம்-கன்னியர்கட்குறுதிகற்புடைமைசொற்குறுதிகண்டிடிற்சத்தியவ
சனம்-மெய்க்குறுதிமுன்பின்சபைக்குறுதிவித்வசனம் வேசையர்க்கு
றுதிதேடல்-வீரருக்குறுதிபெண்மூப்பினுக்குறுதிநல் வீரருக்குறு
வீரம்-செய்குறுதிசீரும்பார்க்குறுதிசெங்கோலசெழுப்படைக்குறு
தியேழும்-செல்வந்தனக்குறுதிவேளாளர்கள்கர்க்குறுதிசேர்ந்திடுஞ்சுற்ற
மார்களாம்- மைக்குறுதியாகவிழிக்குறமடந்தைகரமல்லகமருவுங்க
லைவனே-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

வறுமையிற்சிறுமை

வறுமைதான்வந்திடிற் றாய்பழுதுசொல்லுவாள் மனையாட்டிசற்றுமெண்ணாள்-வாக்கிற்பிறக்கின்றசொல்லெலாம்பொல்லாத வசனமாய் வந்துவிளையும்-சிறுமைபொங்கொலையா விசாரமேயல்லாது சிந்தையிற்றைரியமிலை- செய்யசபைதன்னிலேசென்றுவரவெட்கமாஞ் செல்வரைக்காணினாணும் உறுதிபெறுவீரமுங்குன்றிடும்விருந்துவரிலுயிருடன்செத்தபிணமாம் - உலகம்பழித்திடும்பெருமைபோம்முன்புசென்றொருவரொடுசெய்திசொன்னால்-மறுவசனமுஞ்சொலார்துன்பினிற்றுன்பமிது வந்தணுகிடாதருளுவாய்-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (எஎ)

தீச்சார்பானன்மையிழப்பு,

ஆனைதண்ணீர்நிழல்பார்த்திடத்தவளைசென்றங்கே கலக்கியுலவும்- ஆயிரம்பேர்கூடிவீடுகட்டிடிலேதமறைகுறளுமுடனேவரும்- என்னே பெரியோர்கள்போசனஞ்செயுமளவிலீக்கிடந்திசைகேடதாம்-இன்பமிகுபசுவிலேகன்றுசென்றூட்டுதற்கிளியகோனாதடுக்கும்-சேனைமன்னவரென்னகருமமியம்பினுஞ்சிறியோர்களாற்குறைபடும்-சிங்கத்தையும்பெரியரிஷபத்தையும்பகைமைசெய்ததொருநரியல்லவோ, மானையுந்திகழ்தெய்வயானையுந்தழுவுமணிமார்பனேயருளாளனே- மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (எஅ)

இடையூறுற்றுப்பயன்படுபவை;

ஆறுதண்ணீர்வற்றிவிட்டாலுமூற்றுநீரமுதபானங்கொடுக்குமாதவனையொருபாதிகட்செவிமறைத்தாலுமப்போதுமுதவிசெய்யும் - கூறுமதிதேய்பிறையதாகவேகுறையினுங்குவலயத்திருள்சிதைக்கும் - கொல்லைதான்சாவிபோய்விட்டாலுமங்குவருகுருவிக்குமேய்ச்சலுண்டு வீறுடனுதாரிதான்மிடியானபோதினிலுமிகவாடிவருபவர்க்கு - வேறுவகையில்லையென்றுரையாதியன்றளவியந்துளமகிழ்ந்துதவுவான் - மாறுபடுசூரசங்காரகம்பீரனேவடிவேலணிந்தமுருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. எகூ)

இன்னவர்க்கிதுவில்லையெனல்-

சார்பிலாதவருக்குநிலையேதுமுதலிலாதவருக்கிலாபமேது, தயவிலாதவர்தமக்குறவேதுபணமிலாதார்க்கேதுவேசையுறவு-ஊரிலாதவர்தமக்காசேதுபசிவேளையுண்டிடார்க்குறுதிநிலையேதுண்மையில்லாதவர்க்கறமேதுமுயல்விலார்க்குறவதொருசெல்வமேதுசோர்விலாதவருக்குமற்றொருபயமேதுசுகமிலார்க்காசையேது- துர்க்குணமிலாதவர்க்கெதிராளியேதிடர்செய்துஷ்டர்க்கிரக்கமேது -மார்புறவேவாலிமேலஸ்திரம்விடுத்தபெருமான்மருகனானமுருகா - மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே, (அ௰)

இதினுமிதுநன்றெனல்;

மஞ்சரிக்குருமையறியார்பொருளையெய்தலிற்பலர்மனைப்பிச்சைநன்று-பரிவாகவுபசாரமில்லாவிருந்தினிற்பட்டினி யிருக்கைநன்று-தஞ்சமொருமூலைபுகுமென்றிதனில்யானையொடு சமர்செய்துதோற்றனன்று சரசகுணமில்லாத பெண்களைச்சேர்தலிற்சந்நியாசித்தனன்று - அஞ்சலார்தங்களைக்காப்பாயிருப்பதனிலாவிமெலிந்துபோவதுநன்று-அந்தணர்க்காயத்திலுதவாதிருப்பதனி லாருயிர்விடுத்தனன்று-வஞ்சகருடன்கூடிவாழ்தலிற்றனியேவருந்திடுந்திறமைநன்று-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே; (அக)

நிலையாதவை;

சொற்றவர்கள்ராணுவமுமாறுகோராகிய சூளங்களுந்தாசியுறவும்-குணமிலார்நேசமும்பாம்பொடுபழக்கமுங்குலவுநீர்விளையாடலும்- மற்றலார்தமதிடைவருந்துவிசுவாசமும்பழையதாயாதிநிணரும்- பாதாரமாதரதிபோகமும்பெருகிவருபாங்கானவாற்றுவரவும்-நற்றமொருதுர்ப்புத்திகேட்கின்றபேருறவுநல்லமதயானைநட்பும்-நாவினல்லுறவுமொருநாள்போலிராதிவைகணம்பப்படாதுகண்டாய்- மற்றுமொருதுணையில்லைநீதுணையெனப்பரவும் வானவர்கள்சிறைமீட்டவா- மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (அஉ)

நற்புலவர்தீப்புலவர்செயல்:

மிக்கானசோலையிற்குயில்சென்றுமாங்கனி விருப்பமொடுதேடிநாடும்-மிடைகருங்காகங்களெக்கனியிருந்தாலும் வேப்பங்கனிக்குநாடும்-எக்காலும்வரிவண்டுபங்கேருகத்தினிலிருக்கின்றதேனைநாடும் - எத்தனைசுகந்தவகையுற்றாலுமுறுவள்வண்டினந்தூர்மலத்தைநாடும்- தக்கோர்பொருட்சுவைகளெங்கேயென்று காம்பார்த்துகந்துகொள்வார் - தாழ்வானவன்கண்ணர்குற்றமெங்கேயென்றுதமிழிலாராய்வர்கண்டாய் மைக்காவிவிழியாதுதெய்வானையுங்குறவர் வள்ளியுந்தழுவுகலைவா மயிலேறிவிளையாடுகுகனேபில்வயனீடுமலைமேவுகுமரேசனே. (அங)

தாழ்தற்பெருமை;

வேங்கைகள்பதுங்குதலுமாமுகிலொதுங்கிதலும்வில்சிலை குனிந்திடுதலும்-மேடமதகன்றிடலும்யானைகளொடுங்குதலும்வெள்விடைகள்துள்ளிவிழலும்-மூங்கில்கள்வணங்குதலுமேலவரிணங்குதலுமுனிவர்கணையர்த்துகொளலும்-முதிர்படையொதுங்குதலும்விலைஞர்களடங்குதலுமுதலினைப்பயந்திடுதலும். ஆங்கரவுசாய்குதலுமகிழ்மலருலர்ந்திடலுமாயர்குழல்குரீபடலும். அப்புவியிலிவைகாரியங்களுக்கல்லாம லகறுன்னைப்புலவரும்மாமாங்கனிக்காவரனைவலமதுபுரிந்துவளர்மதகரிக்கனையமுருகா மயிலேறிவிளையாடு குகனேபுலவயனீடுமலைமேவுகுமரேசனே. (அச)

தெய்வச்செயல்.

சோடாய்மரத்திற் புறாரண்டிருந்திடத் துறவுகண்டே வேடுவ
ன்-கோலாமலவையெய்ய வேண்டுமென்றொருகணை தொடுத்துவி
ல்வாங்கிநிற்க, ஊடாடிமேலேயெழப்பிடி லடிப்பதற்குலவுராசா
ளிகூட-உயரப்பறந்துகொண்டே திரியவப்போதுதைத்தசிலைவே
டனடியில்-சேடாகவல்விஷந்தீண்டவேயவன்விழச்சிலையிற் றொடு
த்தவாளி-சென்றிராசாளிமெய்தைத்துவிழ வவ்விருசிறைப்புறாவா
ழ்ந்தவன்றே-வாடாமலிவையெலாஞ் சிவன்செயல்களல்லாதுமன
ச்செயலினாலும்வருமோ- மயிலேறிவிளையாடுகுகனேபுல் வயனீடு
மலைமேவுகுமரேசனே, [பாடலியல்பு] (௮௫)

எழுத்தசைகள் சீர்தளைகளடி தொடைகள் சிதையாதிருக்கவே
வேண்டுமப்பால்- ஈரைம்பொருத்தமொடுமதுரமாய் பளபளப்பி
னியசொற்கமையவேண்டும். அழுத்தமிகுகுறளினிக் கொப்பாக
வே பொருளடக்கமுமிருக்கவேண்டும்-அனபானபாவின மிசைந்
துவரல்வேண்டுமுனலங்கார முற்றதுறையில்- பழுத்துளமுவந்
தோசையுற்றுவரல்வேண்டும் படிக்குமிசைகூடல்வேண்டும்-பாங்
காகவின்னவை பொருந்திடச் சொற்கவிதைபாடிற் சிறப்பென்ப
ரண்-மழுத்தினஞ்செங்கைதனில் வைத்தகங்காளனருள் மைந்த
னென வந்தமுருகா- மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலை
மேவுகுமரேசனே [விபூதிதரிக்குமுறைமை] (௮௭)

பத்தியொடுசிவசிவா வென்றுதிருநீற்றைப்பரிந்துகைபா லெடுத்
துப்- பாரினில்விழாதபடியண்ணாந்துசெவியொடுபெருத்தபுயமீதி
லொழுக-நித்தமூவிரல்களானெற்றியி னழுந்தவுறநினைவாய்தரிப்
பவர்க்கு- நீடுவினையணுகாதுதேகபரிசுத்தமாநீங்காமனிமலனங்கே
சத்தியொடுநித்தம்விளையாடுவன்முகத்திலேதாண்டவஞ்செய்யுந்தி
ரு-சஞ்சலம்வாராதுபாரகதியுதவுமிவனையேசத்தியுஞ் சிவனென்னெ
லாம்- மத்தினியமேருவெனவைத்தமுதினைக்கடையுமான்மருகனான
முருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேச
விபூதிவாங்குமுறைமை னே(௮௭)

பரிதனிலிருந்துமியல் சிவிகையிலிருத்துமுயர் பலகையிலிரு
ந்துமிகவே-பாங்கானவம்பலந்தனிலேயிருந்தும் பருத்ததிண்ணை
யிலிருந்தும்-தெரிவொடுகொடுப்பவர்கள்கீழ்நிற்கயேனின்று திரு
நீறுவாங்கியிடினும் செங்கையொன்றாலும் விரன்மூன்றாலும்வாங்
கினுந்திகழ்தம்பலத்திறேனும்- அரியதொருபாதையினடக்கின்ற
போதிலுமசுத்தநிலமானவதிலும்-அங்கேதரிக்கிலுந்தந்திடிற் கொ
ள்ளினுமவர்க்குநரகென்பவர்பண்டாய்-வரிவிழிமடந்தைகுற வள்
ளிநாயகிதனைமணந்துமகிழ்ஜகநாதனேமயிலேறிவிளையாடுகுகனே
புல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௮௮)

இவ்வுறுப்பாற்பயனில்லையெனல்.

தேவாலயஞ் சுற்றிடாதகாலென்னகால் தெரிசியாக்கண்ணென்னகண் - தினமுமே திருக்கமலபாதத்தை நினையாதசிந்தைதானென்ன சிந்தை - மேவாகமஞ் சிவபுராணமதைக்கேளாமல்விட்டசெவி யென்னசெவிகள் - விமலனைவணங்காதசென்னியென் சென்னியணிவிடை செயாக்கையென்னகை - நாவாரதினையேத்திடாத வாயென்னவாய் நற்றீர்த்தமூழ்காவுடல் - நானிலத்தென்னவுடல்பாவியாகிய ஜனன நண்ணின்றோர்பலனேதுகாண், மாவாகிவேலைதனில்வருசூரன்மார்புருவவடிவேலைவிட்டமுருகா - மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௮௯)

நற்பொருளோடுதீப்பொருள் பிறத்தல்

கோனகனகமங்கையுடன் மூத்தவள்பிறந்ததென்ன குவ்வுமாட்டின்கணதர்தான் - கூடப்பிறந்ததென்ன தண்ணீரினுடனே கொடும் பாசியுற்றதென்ன - மாமருணுமதிநேருநஞ்சம்பிறந்ததென்ன வல்லிருப்பிற்றுருத்தான் வந்தேபிறந்ததென்ன நெடியார்தனின்மொக்குள்வளமொடுபிறந்ததென்னவுன் - பாகமிகுசெந்நெலொடுபதர்தான்பிறந்ததென்னவன்னுமொருதாய்வயிற்றில் -- பண்புறுவிவேகியொடு கயவர்கள்பிறந்ததென்ன பலனேதுமில்லையன்றே, மாகனக மேருவைச் சிலையெனவளைத்தசிவன் மைந்தனெனவந்த முருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, ()

தன்னினத்தாலழிவு.

குலமானசம்மட்டி முறடுகைக்குதவியாய்க் கூரிரும்புகளைவெல்லும் கோடாலிதன்னுள்ளமரமதுநுழைந்துதன்கோத்திரமெலாமழிக்கும், தலமானபார்வைசேர்குருவியானதுவந்து தன்னுடைய றவைகளையார்க்கும், நட்புடன்வளர்ந்தகலைமானென்றுசென்றுதன்னவில்சாதிதனையிழுக்கும், உலவுநற்குடிதனிற் கோளர்களிருந்து கொண்டுற்றுறவையிடறிப்பார் - உளவனில்லாமலூரழியாதெனச்சொல்லுமூலகமொழிநிசமல்லவோ - வலமாகவந்தரனிடத்தினிற் கனி கொண்டமதயானைதன்சோதரா - மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே [விணுக்குழைத்தல்] (௯௧)

குயின்முட்டைதனைத்தன்று காக்கையடைகாக்கும் குணம்போலும் ஈக்களெல்லாம், கூடியேதாமுண்ணவேண்டுமென்றேதிலங் கூடியத்தநறவுபோலும், பயில்சோரருக்குப்பிறந்திடத்தாய்பெற்ற பாலனென்றுட்சருதியே - பாராட்டிமுத்தமிட்டன்பாய் வளர்த்திடும் பண்பிலாப்புருஷர்போலும் - துயிலின்றிநிதிகளைத்தேடியே யொருவர்பார்த்தேடுத்தெறித்திடாமல் - தொகைபண்ணி வைத்திடுவர்கைக்கொண்டுபோகவருசொந்தமானவர்வேறுகாண் - வயிரமொடுசூரனைச்சங்காரமேசெய்துவானவர்க்குதவுதலைவா மயிலேறிவிளையாடுகுகனேபுல் வயனீடுமலைமேவுகுமரேசனே (௯௨)

இதுசேரினிதுபயன்படாதெனல்,

அழலுக்குளே விட்டநெய்யும் பெருக்கான வாற்றிற்கரைத்த
புளியும்-அரிதானகமரிற் கவிழ்த்திட்டபாலும் வருமலங்கக்கிடு
பூசையுங்கழல் பெருங்காற்றினில்வெடித்தபஞ்சும்பனற்சொரிநரு
ய்பனிநீருநீள்-சொல்லரியகாட்டுக்கெறித்த நிலவுங்கடல்சுழிக்குளே
விடுகப்பலும்-விழலுக்கிறைத்திட்ட தண்ணீருமுகமாய வேசைக்க
ளித்தபொருளும் வீணருக்கேசெய்தநன்றியும் பலனில்லைவிருதா
வெனபர்கண்டாய்-மழலைப்பசுங்கிள்ளைமுன்கைலை மங்கைதருவ
ண்ணக்குழந்தைமுருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு
மலைமேவுகுமரேசனே (௯௩)

கைவிடத்தகாதவர்

அன்னைசுற்றங்களையுமற்றைநாண் முதலாவடுத்தவரு பழையோ
ரையும்-அடுபகைவரிற்றப்பிவந்தவொரு வேந்தனையு மன்பானபெ
ரியோரையும், தன்னைநம்பினவரையு மேழையானவரையுஞ் சார்ந்
தமறையோர்தம்மையும்-தருணமிதுவென்றுநல் லபத்துவேளையி
ற்சரணம் புகுந்தோரையும் நன்னயமதாகமுன் னுதவி செய்தோ
ரையுந்தானுந்தனக்குறுதியாய்- நற்றுசேவகனையுங்காப்பதல்லாது
கை நழுவவிடலாகாதுகாண், மன்னயிலுமினியசெஞ் சேவலுஞ்
செங்கைமலர்வைத்த சரவணபவனே மயிலேறிவிளையாடு குகனே
புல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௯௪)

தகாதசெயல்,

அண்டிவருமுற்றார் பசித்தங்கிருக்கவே யன்னியர்க்குதவுவோ
ரும்-ஆசுதபுபெரியோர்செய் நேசத்தைவிட்டுப்பி னற்பரையடுத்
தபேரும்-கொண்டவொருமனையாளிருக்கப்பரத்தையைக்கொண்
டாடிமருவுவோரும் கூருசற்பாத்திரமிருக்கமிகுதானமதுகுணமி
லார்க்கீந்தபேரும்- கண்டுவருபுதியோரை நம்பியே பழையரைக்
கைவிட்டிருந்தபேரும் கரிவாலைவிட்டுநரி வால்பற்றிநதிநீர்கடக்கி
ன்றமரியாதைகாண்-வண்படர்கடப்பமலர்மாலிகாபரணமணிமார்
பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலை
மேவுகுமரேசனே [நல்லோர்முறை] (௯௫)

கூடியேசோதரர்கள் வாழ்தலாலுந்தகு குழந்தைபல பெறுத
லும்ம- குணமாகவேபிச்சையிட்டுண்கையாலுஞ்சொடும்பிதிர்க்கிடு
தலாலும் தேடியேதெய்வங்களுக்கிதலாலுந் தியாகங்கொடுத்தா
லாலும்-சிறியோர்கள்செய்திடும் பிழையைப்பொறுத்துச் சினத்
தைத்தவிர்த்தலாலும், நாடியேதாழ்வாய் வணங்கிடுதலாலுமிகநல்
வார்த்தைசொல்லலாலும், நன்மையேதருதலாற்சூழ்ச்சிகள் வராவி
வை நல்லோர்கள் செய்முறைமைகாண், வாடிமனநொந்துதமிழ்
சொன்னநற்கீரன்முன்வந்துதவிசெய்தமுருகா மயிலேறி விளையா
டுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௯௬)

அடைக்கலங்காத்தல்

அஞ்சலெனுநாயினுடல் தருமன்சுமந்துமுன்றுற்றறைக்கடத்து
வித்தான், அடைக்கலமெனுங் கயற்காகநெடுமாலுடனருச்சுனன்
சமர்புரிந்தான், தஞ்சமெனவந்திடுபுறவுக்கு முன்சிபிசரீத்ந்தனை
க்கொடுத்தான், தடமலைச்சிறகரிந்தவனைமுன்காக்கத்தநீசிமுறுதெ
பளித்தான், இன்சொலுடனே பூததயவுடையராயினோ ரெவரு
மாபத்திலை! இனியதன்சிவனைவிடுத்தாகிலுங்காத்திரங்கிரட்சிப்
ன்றோ-வஞ்சகிர உஞ்சமொடுதாருகன்சிங்கமுகன்வளர்சூரனுட
ற்கீண்டவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகு
மரேசனே [னே (௯௰௭)

யோக்கியாயோக்கியம்

பாலினொடுதேன்வந்து சேரில்ருசியதிகமாம்பருகுநீர்சேரிலெ
ன்னும்? பவளத்தினிடை முத்தைவைத்திடிற் சோபிதம்படிகமணி
கோக்கிலென்னுப்! மேலினியமன்னர்பால்யானை சேர்வதுகனதை
மேஷமதுசேரிலென்னும்? மிக்கானதங்கத்தினவமணி யுறிற்பெரு
மை வெண்கல்லமூத்திலென்னும்! வாலிபமினேர்களுட னிளையோ
ர்கள் சேரினலம் விளைகிழவர்சேரிலென்னும்? மருவுநல்லோரிடம்
பெரியோர்வரிற்பிரியம்வருகயவர்சேரிலென்னும்?மாலிகைதரித்த
மணிமார்பனேதெய்வானைவள்ளிக்குவாய்த்தகணவா? மயிலேறிவி
ளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௯௰௮)

பெரியோரியல்பு

அன்னதானஞ்செய்தல்பெரியோர்சொல்வழிநிற்றலாபுத்தின் வ
ந்தபேருக்- கபயங்கொடுத்திடுதனல்லினஞ்சேர்ந்திடுதலாசிரியின்
வழிநின்றவன்-சொன்னமொழிதவறாது செய்திடுதல்தாய்தந்தைது
ணையடியருச்சனைசெயல்-சோம்பலில்லாமலுயிர் போகினும்வாய்
மைமொழிதொல்புவியினாட்டியிடுதல்-மன்னனைச்சேர்ந்தொழுகல்
கற்புடையமனைவியொடுவைகினுந் தாமரையிலை-மருவுநீரெனவுறு
தலிவையெலாமேலவர்தமாண்பென்றுரைப்பரன்றோ -வன்னமயி
ன்மேலிவர்ந்திவ்வுலகையொருநொடியில் வலமாகவந்தமுருகா-ம
யிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௯௰௯)

நூற்பயன்

வன்னமயிலேறிவரு வேலாயுதக்கடவுண்மலைமேலுகந்த முருக
ன்-வள்ளிக்கொடிக்கினியவேங்கைமரமாகினோன்வானவர்கள்சேனு
பதி-கன்னன்மொழியுமைபாடிருப்புதல்வனரன்மகன்கங்கைபெற்
றருள்புத்திரன் கணபதிக்கிளையவொரு மெல்ஞ்ஞானதேசிகக்கட
வுளாவினன்குடியினன்-பன்னரியபுல்வயலில்வாலகுமரேசர்மேற்
பரிந்துகுருபாததாசன், பாங்கானதமிழாசிரியவிருத்தத்தினறை
பாடலொருநூறநாடி, நன்னயமதாகப்படித்தபேர்கேட்டபேர்
நாடோறுங்கற்றபேர்கள்;ஞானயோகப்பெறுவர்பதவியாவும்பெ
றுவர்நன்புத்தியும்பெறுவாரே, [குமரேசர்சதகம்,முற்றிற்று] (௱)

ehkel
22 1 89